**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2017/2018**
**(2015/2016 Batch September/ October 2020)**

# EC 3113 – Development Economics

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டிலிருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01) அ) பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(05 புள்ளிகள்)

ஆ) இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை அபிவிருத்தியாக மாற்றுவதிலுள்ள இடர்பாடுகள் எவை?

(08 புள்ளிகள்)

இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பண்புகள் யாவை?

(07 புள்ளிகள்)
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

02) அ) வருமான ஏற்றத்தாழ்வு என்பதால் கருதப்படுவது யாது? பொருளாதாரமொன்றில் அதனை எவ்வாறு அளவிட்டுக் கூற முடியும்?

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக கடந்தகால அரசாங்கங்கள் எடுத்த நடவடிக்கைகள் குறித்து கருத்துரைக்குக

(10 புள்ளிகள்)
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03) அ) நிலைபேறான அபிவிருத்தி என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது? நிலைத்துநிற்கும் அபிவிருத்தியின் இலக்குகள் யாவை?

(06 புள்ளிகள்)

ஆ) இலங்கை போன்ற ஒரு நாட்டில் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை எடுத்துவர அவசியமான உத்திகள் யாவை?

(06 புள்ளிகள்)

இ) நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் (Sustainable Development Goals -SDGs) யாவை?

(08 புள்ளிகள்)
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## பகுதி – II

4) அ) கிராமிய அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி என்பவற்றிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

ஆ) கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் கிராம, மற்றும் பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

5) இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலும் வறுமை ஒழிப்பிலும் உட்கட்டுமான அபிவிருத்தியின் தாக்க விளைவுகள் யாவை?

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

6) இலங்கையில் புத்தாக்கத்தால் தூண்டப்படும் பொருளாதார வளர்ச்சிக்கான ஓர் உந்துகை காணப்படுகின்றதா? ஆராய்க.

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

7) .பின்வருவனவற்றில் இரண்டு குறித்து சிறுகுறிப்பு எழுதுக.

அ) கெயின்சிய வளர்ச்சிக் கோட்பாடு.

ஆ) வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சியும் (Pro-poor Economic Growth) சமுர்த்தித் திட்டமும்.

இ) கருத்திட்டத்தை அடையாளம் காணுதல்.

ஈ) மானிட அபிவிருத்திச் சுட்டெண். (HDI).

**(தலா 10 புள்ளிகள்)**